செய்தி வெளியீடு எண்: 769 நாள்: 25.10.2018

## செய்தி வெளியீடு

## தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய திட்டப்பகுதிகளில் அரசுத்துறையுடன் இணைந்து தீவிர கொசு ஒழிப்பு நடவடிக்கை பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுகோள்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 134 வாரிய திட்டப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய தீவிர கொசு ஒழிப்பு மற்றும் சுகாதார பணிகள் குறித்து தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய தலைமையிடத்தில் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.எஸ்.சண்முகம்., இ.ஆ.ப தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்(பொறுப்பு) திருமதி.ஆர்.லலிதா,இ.ஆ.ப, மற்றும் சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், சுகாதாரத் துறைகளின் உயர்அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் தீவிர கொசு ஒழிப்பு நடவடிக்கையாக தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய குடியிருப்புகளில் சேகரிக்கப்படும் குப்பைகள் தேங்காமல் தொடர்ந்து அகற்றப்பட வேண்டும் எனவும், கழிவுநீர் மற்றும் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்து தண்ணீர் தேங்காமல் கண்காணிக்க வேண்டும் எனவும், அப்பகுதி மக்களுக்கு பயன்பெறும் வகையில் சிறப்பு சுகாதார மருத்துவ முகாம்கள் நடத்தப்பட வேண்டும் எனவும், சுகாதாரம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வயையில் ஆட்டோ மூலம் பிரச்சாரம், துண்டுபிரசுரம் வினியோகித்தல், நேரடி அறிவுரைகள் மற்றும் செயல்முறை விளக்கங்கள் அளித்தல், பெருநகர சென்னை மாநகரட்சியின் பிரச்சார வாகனம் மூலம் கொசு ஒழிப்பு மற்றும் சுகாதாரப் பணிகள் குறித்த படகாட்சிகள் திரையிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இப்பணிகள் யாவும் இன்று முதல் (25.10.2018 ) தொடங்கவும் முடிவெடுக்கப்பட்டது.

தமிழக அரசு மாநிலம் முழுவதும் செயல்படுத்தி வரும் சுகாதார நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், சுகாதாரதுறை ஆகியவற்றுடன் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியமும் இணைந்து, 134 வாரிய திட்டப்பகுதிகளில் தீவிர கொசு ஒழிப்பு மற்றும் சுகாதார பணிகளை இம்மழைக்காலம் முடியும் வரை தொடர்ந்து மேற்கொள்ளும். இப்பணிக்கு பொதுமக்கள் தங்களது ஒத்துழைப்பினை அளிக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**